# பங்களாதேஷ் தற்காலிக அரசியல் திட்டம் அறிவிப்பு

## பார்லிமென்ட் முறையில் இயங்கும்; பிரதமர் அமைச்சரவை அமைப்பார்

டாக்கா, ஜன. 12
புதிய பங்களாதேஷ் குடியரசுக்கான தற்காலிக அரசியல் திட்டமொன்று டாக்காவில் அறிவிக்கப்பட்டது.

1972ம் ஆண்டுக்கான இந்த தற்காலிக அரசியல் திட்டம் பார்லிமென்ட் முறையிலான அமைப்பைக் கொண்டதாக இருக்கும்.

பாகிஸ்தானுடன் இணைந்து இருந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதில் தொடர்ந்து அங்கம் வகிப்பார்கள். தேசிய சட்ட சபைக்கும் மாகாண சட்ட சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தொடர்ந்தும் பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

பிரதமர் தனது விருப்பப்படியே தனது அமைச்சரவையை அமைத்துக்கொள்ளலாம்.

பங்களாதேஷ் ஜனாதிபதி ஷேக் முஜிபுர் ரஹ்மான் தனது சகாக்களுடன் தொடர்ச்சியாக இரண்டு கூட்டங்களில் கலந்துகொண்டபின் இம்முடிவு எடுக்கப்பட்டது. மேலும் பல கூட்டங்களை அவர் நடத்துவிருக்கிறார்.

### லெனனுன் முன்னாள் பிரதமர் பாராட்டு

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நலத்துடன் விடுதலை செய்யப்பட்டதற்காக லெனனுன் முன்னாள் பிரதமர் தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

புதிய பங்களாதேஷ் அரசு நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுமென்று தாம் நம்புவதாக அவர் தனது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

## எகிப்து போருக்குத் தயாராம்!

கெய்ரோ, ஜன 12
இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்பதற்கு எகிப்து ராணுவத்தைத் தயார்படுத்துவதாக எகிப்திய பிரதமர் திரு. பௌஸி தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு எகிப்து எடுத்த சகல நடவடிக்கைகளும் தோல்வியில் முடிந்துள்ளன. எனவே யுத்த நடவடிக்கையை விட எகிப்துக்கு வேறு வழியில்லை என்றார்.

### மெய்யர் கருத்து

எகிப்தின் ராணுவ நடவடிக்கையிலிருந்து இஸ்ரேலைத் தற்காத்துக்கொள்ளும் என இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெய்யர் தெரிவித்தார்.

## பெண்கள் மானபங்கம் விசாரணை நடத்தக்கோரிக்கை

பங்களாதேஷில் பாகிஸ்தான் ராணுவத்தினர் தாய்மார்களையும் இளம் பெண்களையும் கொடுமைப்படுத்தி கற்பழித்து, கொலை செய்த சம்பவங்களையும் குழந்தைகள் தாய்மார்கள் முன்னிலையிலேயே கொடூர மான முறையில் கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் பற்றியும் விசாரணை நடத்துமாறு சர்வதேச நீதிபதிகள் கமிட்டியை பங்களாதேஷ் மகளிர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## ரூ. 20,000 பொருட்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம் விசே.
தெல்லிப்பழை பட்டினசபை எல்லைக்குள் உள்ள ஒருவரது வீட்டில் இருபதினாயிரம் ரூபா பெறுமதியான நூறு 'ஹென்றி சான்டோஸ்' மணிக்கூடுகள் பருத்தித்துறை சுங்க இலாகா அதிகாரி திரு. ஏ. ஆனந்தசிங்கத்தால் கைப்பற்றப்பட்டது. பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## 20ம் திகதி தூக்கு

கோட்டை வியாழன் சுதந்திர இரட்டைக் கொலை வழக்கில், முதல் எதிரியான அக்பிரட் டிசொய்சா இம்மாதம் 20ம் தேதியும், இரண்டாவது எதிரியான லூ அக்சோர்ட் இம்மாதம் 21ம் தேதியும் வெலிக்கடை சிறைச்சாலையில் தூக்கிலிடப்படுவார்கள். மகாதேசாதிபதியின் உத்தரவின் பேரில் இத்தண்டனைகள் நிறைவேற்றப்படவிருக்கிறது.

மூன்றாம் எதிரியான டபிள்யு. வில்லியம் பெர்னாண்டோவிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது.

## பல்கேரியாவும் அங்கீகரித்தது

புக்காரெஸ்ட், ஜன. 12
சுதந்திர பங்களாதேஷ் குடியரசை பல்கேரியா அங்கீகரித்துள்ளது.

பங்களாதேஷ் குடியரசை அங்கீகரித்த நாடுகளில் பல்கேரியா நாலாவதாகும். இதற்கு முன்பு இந்தியா, பூட்டான், கிழக்கு ஜெர்மனி ஆகியவை இந்த நாட்டை அங்கீகரித்திருந்தன.

பங்களாதேஷை சுதந்திரக் குடியரசாக பல்கேரியா அங்கீகரித்த செய்தியை அதன் அதிபர் தொதோர் ஜிவ்கோவ் தந்தி மூலம் பங்களாதேஷ் ஜனாதிபதி ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு அறிவித்தார்.

ஷேக் முஜிபுர் விடுதலையானதற்குத் தனது வாழ்த்தை திரு. ஜிவ்கோவ் அதில் தெரிவித்திருப்பதோடு ராஜ்ய ரீதியிலான உறவையும் பங்களாதேஷுடன் ஏற்படுத்திக்கொள்வதற்குவிருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாராட்டு

இதே நேரத்தில் பங்களாதேஷை கிழக்கு ஜெர்மனி அங்கீகரித்ததற்காக பங்களாதேஷ் ஜனாதிபதி ஷேக் முஜிபுரும், வெளியுறவு அமைச்சர் ஆஸாத்தும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இந்த நாட்டைப் பின்பற்றி மற்ற நாடுகளும் தமது நாட்டை அங்கீகரிக்குமென முஜிபுர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சரியான நேரத்தில் சரியான முடிவை கிழக்கு ஜெர்மனி எடுத்திருக்கிறதென திரு. ஆஸாத் சொன்னார்.

## சோவியத் யூனியனில் 22 பல்கலைக்கழகங்களில் பத்திரிகைத் தொழில்

மாஸ்கோ, ஜன 12
சோவியத் பத்திரிகையாளர் சங்கத்தில் 50,000க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். 22 சோவியத் பல்கலைக்கழகங்களில் பத்திரிகைத் தொழில் கற்பிக்கப்படுகிறது. 12,000 மாணவர்கள் இத்தொழிலைக் கற்கின்றனர்.

வேறு எந்த நாட்டையும் விட சோவியத்யூனியனில் வாசகர் தொகை அதிகம். ஒரு சோவியத் குடும்பம் சராசரியாக 5 செய்திப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் சந்தாகட்டுகிறது. சோவியத் யூனியனில் பத்திரிகைகளின் வருடாந்தர ஒட்டுமொத்த விநியோகம் 3,500 கோடி பிரதிகள் ஆகும்.

'பிராவ்தா' 'இஸ்வெஸ்தியா', 'திருட்' ஆகிய பத்திரிகைகளை எல்லோரும் படிக்கின்றனர். 'கொம்சமால்ஸ்கயா பிராவ்தா' (வாலிப இளைஞர் பத்திரிகை), 'கிரஸ்னயா ஸ்வெஸ்தா' (சோவியத் ராணுவ அமைச்சகத்தின் பத்திரிகை), 'செல்ஸ்கயா ஷிஸின்' (விவசாயப் பத்திரிகை), 'சோசியலிஸ்டிச் செஸ்கயா இந்தஸ்திரியா' (தொழில்துறை பத்திரிகை) 'லித்தரதுர்னயா கெஸத்தா' (10 இலட்சம் பிரதிகள் விநியோக முள்ள சோவியத் எழுத்தாளர் சங்கப் பத்திரிகை) ஆகியவை ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தினருக்கென வெளியிடப்பட்டபோதிலும் அவற்றை எல்லோரும் படிக்கின்றனர். பெண்கள் பத்திரிகைகளும், குழந்தைகள் பத்திரிகைகளும் 50 இலட்சம் முதல் 1 கோடி பிரதிகள்வரை விற்பனையாகின்றன.

சோவியத் யூனியனில் 7500 தினசரி பத்திரிகைகள், 57 மொழிகளில், 13 கோடியே 40 இலட்சம்பிரதிகள் வெளியிடப்படுகின்றன. ஒரு சோவியத் பத்திரிகை பெரும்பாலும் அதன் வாசகர்களால் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்திரிகையிலும் வெளியாகும் விஷயங்களில் பாதிக்கு மேற்பட்டவை தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அலுவலக ஊழியர்கள் ஆகியோரால் அனுப்பப்பட்டவையாகும். சோவியத் பத்திரிகைகளின் உண்மையான வெகுஜனப் பண்பும் ஜனநாயகப் பண்பும் நிறைந்திருப்பதற்கு இதுவே காரணமாகும் என்றும் சோவியத் பத்திரிகையின் ஒவ்வொரு வாசகனும் முதன்மையான பத்திரிகையாளன் என்றும் கருதப்படுகிறது.

## நோயாளிகள் எங்கும் சிகிச்சை பெறலாம்!

### பிரதேச விதிபற்றி முடிவு இல்லையாம்

கொழும்பு, புதன்
நோயாளிகள் தங்கள் தங்கள் பகுதியிலேயே சிகிச்சை பெறவேண்டுமென்ற பிரதேச விதி சம்பந்தமான தீர்மானம் குறித்து சுகாதார அமைச்சு இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லையென்று சுகாதார அமைச்சின் நிரந்தரச் செயலாளர் டாக்டர் பி. ஈ. எஸ் வீரதுங்க அறிவித்தனர்.

தமது அமைச்சுக்கு சுகாதார அதிகாரி ஒருவர் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் மேற்படி தீர்மானம் இடம் பெற்றுள்ளதாகவும் ஆனால் இதுபற்றி அமைச்சு எதுவித முடிவும் இதுவரை எடுக்கவில்லையென்றும் டாக்டர் வீரதுங்கா மேலும் தெரிவித்துள்ளார்.

நோயாளிகள் தங்கள் பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளிலேயே சிகிச்சை பெற வேண்டும் என்று அண்மைக் காலத்தில் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

### 'வடபகுதியின் செல்வம் பாடசாலை'

பருத்தித்துறை, புதன்
"நதியற்று, வளமற்று, நிலமற்று வரண்டு போனாலும் கல்வி வளம்பெற்று விளங்கும் யாழ்ப்பாணத்தின் செல்வம் எமது பாடசாலைகளே. இப்பாடசாலைகளை ஆலயங்கள்போல் பேணிப்பாதுகாத்து வளர்க்கவேண்டியது எமது கடமையாகும். எமது எதிர்காலம் மதி வளர்க்கும் இப்பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது."

இவ்வாறு கட்டைவேலி குருகுலசாரியர் கல்லூரிப் பழைய மாணவர் மன்றக் கூட்டத்தில் தலைமைதாங்கிப் பேசிய திரு த. வடிவேலு கூறினார். இக்கூட்டத்தில் மரவேலைக்கான ஒரு கட்டடம் அமைக்கவேண்டுமென்றும், பாடசாலைத் தவணைப் பாடங்களை சிரமதான முறையில் திருத்தவேண்டுமென்றும், சேவை வசதிக் கட்டணத்தைப் பெற்றாரின் சம்மதத்துடன் அதிகரிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### பனை மரம் நாட்டு விழா

கொழும்பு, புதன்
கல்வெட்டித்துறையில் உள்ள இலந்தைக்காடு என்னுமிடத்தில் இம்மாதம் 16ந் திகதி காலை பனை நாட்டும் வைபவம் நடைபெறும். இளந்தமிழர் முன்னேற்ற மன்றம் இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பனைகளைப் பெருமளவில் உண்டாக்கவேண்டிய அவசியம் பற்றி எடுத்துரைக்கும் ஆரம்பக்கட்டமாக இது அமையவேண்டுமென்று மன்றத் தலைவர் திரு. ஞா. செல்வச்சந்திரன் தெரிவித்தார்.

### சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், விசே
சாவகச்சேரி நுணாவில் கிளைவேலித் தாளையம்பதி ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான வருஷார்ச்சனை இம்மாதம் 21ம் திகதி முதல் 26ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது. இறுதி நாளில் நவசந்திர சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறும்.

ஹம்ப்ரியும், கென்னடியும்

## பங்களாதேஷை அங்கீகரிக்க வற்புறுத்து

வாஷிங்டன், ஜன 12
புதிய பங்களாதேஷ் குடியரசை அமெரிக்கா அங்கீகரிக்கவேண்டுமென அமெரிக்க செனட்டர்கள் இருவர் நிக்சன் நிர்வாகத்தை வலியுறுத்தியுள்ளனர்.

செனட்டர் எட்வேர்ட் கென்னடியும், செனட்டர் ஹியுபேர்ட் ஹம்ப்ரியும் இதனை வலியுறுத்தியுள்ளனர். ஜனநாயகக் கட்சி செனட்டர்களான இவர்கள் அமெரிக்க அரசியலில் பிரபலமான இடத்தைப் பெற்றவர்கள் என்பது தெரிந்ததே. செனட்டர் ஹம்ப்ரி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் என்பதும், இவ்வருடம் நடக்கவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடவிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அரசை அங்கீகரிக்கவேண்டுமென்று வலியுறுத்தியுள்ள செனட்டர் எட்வேர்ட் கென்னடி இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ள இந்தியாவுக்கான அமெரிக்கப் பொருளாதார உதவியைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

செனட்டர் ஹியுபேர்ட் ஹம்ப்ரியும் பங்களாதேஷை அங்கீகரிக்குமாறு நிக்சன் நிர்வாகத்தை வலியுறுத்தியிருக்கிறார். ஐ. நா. வில் உறுப்பு நாடாக பங்களாதேஷ் சேர்வதை அமெரிக்கா ஆதரிக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

### கவனத்தில் கொள்ளவில்லை

இது பற்றி வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பங்களாதேஷை அங்கீகரிப்பது பற்றி இப்பொழுது அமெரிக்கா சிந்திக்கவில்லை எனத் தெரிவித்தார்.

